கோயம்புத்தூர் தலைமை மருத்துவ மனைக்கு கண் மருத்துவர்

* வினா 272—திரு. எம். பூபதி: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

கோயம்புத்தூரிலுள்ள சர்க்கார் தலைமை ஆஸ்பத்திரியில் ஒரு கண் வைத்தியரை நியமிக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கோயமுத்தூர் மருத்துவக் கல்லூரி கண் நோய்ப் பிரிவு சிறப்புப் பேராசிரியராகவும், கோயமுத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவச்சாலையில் (முன்னாள் தலைமை மருத்துவச்சாலை) சிகிச்சைப் பணி புரியவுமாக ஒருவரை நியமித்து, 16-12-1969 அன்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. ஏற்கனவே 14-3-1969 முதல் கண்நோய் பிரிவில் சிறப்புப் பட்டம் பெற்ற உதவி மருத்துவர் ஒருவர் மருத்துவ மனையின் கண் நோய் பிரிவில் வேலை பார்த்து வருகிறார்.

திரு. எம். பூபதி: தலைவர் அவர்களே, கோயமுத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவச்சாலையில் கண் நோய் மருத்துவர் நியமிக்கப்பட்டிருந்தாலும் அங்கு வருகின்ற நோயாளிகளினுடைய கண்களைப் பரிசோதனை பண்ணுவதற்குத் தேவையான, கண்ணில் இருக்கும் ஓட்டையையும், பிளவையும் அடைத்து உறையச் செய்யும் மெஷின் (Photo Coagulation Machine) கண்ணுக்குள் இருப்பதைப் பார்க்கும் கருவி (Ophthalmoscope) கண்ணுக்குள்இருக்கும் நரம்புகளைப் பரிசோதனை செய்யும் கருவி (Electro-retinogram) கண்ணுக்குள்ளிருக்கும் பிசிறு, கட்டிகளை கண்டு பிடிக்கும் கருவி (Ultro-sonogram) மற்றும் 'காண்டாக்ட் லென்ஸ்' ஆகியவை அங்கு இல்லை என்று தெரிகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லாவற்றையும் சொல்லிக் கொண்டே போகிறீர்களே.

திரு. எம். பூபதி : பல்வேறு ஆஸ்பத்திரிகளில் இரண்டு மூன்று கருவிகள் மட்டும் உபயோகிப்படுத்துகிறார்கள். ஆனால், இம்மாதிரியான முக்கியமான கருவிகள் இல்லாமல் எந்தவிதமான ட்ரீட்மெண்டும் செய்ய முடியாது. ஆகவே, இவைகளையெல்லாம் அரசு உடனடியாக வாங்கிக்கொடுக்க தக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அத்தகைய கருவிகள் அங்கு இருக்கின்றனவா இல்லையா என்ற தகவல் இங்கே இல்லை. அங்கே அப்படிப்பட்ட கருவிகள் இன்றியமையாமல் தேவைப்படுகின்றன என்றால் அங்கிருக்கும் தலைமை மருத்துவ அதிகாரியோ மற்றவர்களோ அரசாங்கத்திற்கு எழுதி அனுப்பினால் அது பரிசீலிக்கப்படும். ஒரு கண் மருத்துவப் பிரிவுக்கு என்ன என்ன கருவிகள் இன்றியமையாமல் தேவைப்படுகின்றனவோ அவையத்தனையும் சேலம் மாவட்டத் தலைநகரில் இருக்கும் மருத்துவச்சாலையில் என்ன தேவைப்படுகின்றனவோ அவை அத்தனையும் இருக்க வேண்டியதற்கு வகை செய்வதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்கும்.